Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

## சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

வார பாடசாலை (01ம் தவணை)

பாடம் - வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

வாரம் - 03ம் வாரம்

தரம் 10

Prepared by- R.Iroshini (Kg/Dehi/Edurapola T.V

### பகுதி I

சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. விமலா என்பவள் சுகாதாரமான முறையில் இடியப்பம், பிட்டு, ரொட்டி, கடலை, அப்பம், சோறு, ஆகியவற்றை காலை உணவுக்காக தானே தயாரித்து விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை நடாத்தி வருகின்றாள்.

1. இவ்வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனிதத் தேவை எது

   1.உணவு  2. இருப்பிடம்
   3. உடைகள்  4. சுகாதாரம்

2. இவ்வணிகத்தினால் வழங்கப்படும் இடியப்பம், பிட்டு, ரொட்டி, கடலை, அப்பம், சோறு ஆகியவற்றை எவ்வாறு அழைக்க முடியும்.

   1. தேவைகள் என  2. உள்ளீடுகள் என
   3. உற்பத்திப் பொருட்கள் என  4. மூலதனம் என

3. வணிகத்தின் வளர்ச்சிக் கட்டங்களை கிரமமாக எடுத்துக் காட்டும் விடையை தெரிவு செய்க.
   1. பணப்பாவனை, பண்டமாற்று முறைமை, கைத்தொழில் புரட்சி, தகவல் தொழினுட்பம்.
   2. தகவல் தொழினுட்பம், கைத்தொழில் புரட்சி, பணப்பாவனை, பண்டமாற்று முறைமை.
   3. பண்டமாற்று முறைமை, கைத்தொழில் புரட்சி, பணப்பாவனை, தகவல் தொழினுட்பம்.
   4. பண்டமாற்று முறைமை, பணப்பாவனை, கைத்தொழில் புரட்சி, தகவல் தொழினுட்பம்.

4. மூலதனம் எனும் உற்பத்திக் காரணியில் அடங்காதவை
   1. காசு  2. இயற்கை வளங்கள்
   3. இயந்திரம்  4. கட்டிடங்கள்

5. தொழில் பாதுகாப்பானதா என்பதில் அக்கறை கொள்ளும் பிரிவினர்.
   1. .ஊழியர்  2.உரிமையாளர்
   3. வாடிக்கையாளர்  4.நிதிநிறுவனங்கள்

பகுதி II

02. பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

(அ) உயிர் வாழ்வதற்காக மனிதனால் அத்தியவசியமாக நிறைவு செய்துகொள்ள வேண்டியவை மனிதத் தேவைகள் ஆகும்.

(ஆ) உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களின் தன்மையின் அடிப்படையில் பொது மற்றும் தனியார் வணிகங்கள் என வகைப்படுத்தப்படும்.

(இ) உற்பத்தியின்போது பயன்படுத்தப்படும் மனிதனால் தயாரிக்கப்பட்டுள்ள விடயங்கள் உற்பத்திக் காரணியான உழைப்பு ஆகும்.

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

01. வணிகம் என்றால் என்ன?

02. வணிகத்தின் நோக்கங்கள் எவை?

03. தேவையின் பண்புகள் 3 தருக?

04. விருப்பம் என்றால் என்ன?

05. தேவை விருப்பம் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் 3 தருக?

06. தசுன் என்பவர் பதனிட்ட தோலைப் பயன்படுத்துவதன் மூலம் சப்பாத்துக்களைத் தயாரித்து விற்பனைசெய்யும் வணிகமொன்றை நடாத்தி வருககின்றார்.

   i. தசுனின் வணிகத்தின் மூலம் பூர்த்திசெய்யப்படும் அடிபபடை மனிதத் தேவை யாது?

   ii. சப்பாத்து தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்ற பதனிட்ட தோல் மேலே குறிப்பிட்ட வணிகத்தின் உற்பத்திக் காரணியான நிலத்துக்கு உரித்தானதாகும். நீர் இக்கூறறுடன் இணங்குகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

07. உற்பத்தியின் தன்மைக்கேற்ப வணிகங்களை எவ்வாறு வகைப்படுத்த முடியும்?

08. உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உற்பத்திக் காரணிகளையும் அவற்றுக்கான பிரத்தியுபகாரங்களையும் பட்டியல் படுத்துக.

09. வணிக நடடிக்கைகள் மீது அக்கறை செலுத்தும் நான்கு தரப்பினரைக் குறிப்பிடுக?

10. வணிக நிறுவனம் ஒன்றன் மீது அரசு அக்கறை கொள்வதற்கான காரணங்கள் எவை?